**நாவலபிட்டிய நகர சபை**
**கண்டி மாவட்டம்**

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 27 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 26 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜுலை 14 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

நிதிக் கூற்றுக்களானவை நாவலப்பிட்டிய நகர சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 பெற வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 03 பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 63,687,046 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 17,574,594 ஆகும்.

1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 04 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 67,007,173 ஆகக் காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 15,355,421 தொகை 01 வருடத்தை மிகைத்த மீதிகளை அடக்கியுள்ளது.

1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்கைள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) நகர சபை கட்டளைச் சட்டம் பிரிவு 159 (ஊ) | அமைச்சரின் எழுத்துமூலம் அங்கீகாரம் இன்றி ரமழான் கொண்டாட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட விழாவின் உபசரிப்பு விடயங்களுக்காக ரூபா 50,000 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |

i. நி.பி. 372(ஆ) — குறிப்பிட்ட ஒரு விடயத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணம் அவ் விடயம் முடிவடைந்த உடன் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 22 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த 01 வருடம் முதல் 06 வருடம் வரையான காலப் பகுதி தொடர்பான முற்பணம் ரூபா 33,400,712 இனை தீர்த்திருக்கவில்லை.

ii. நி.பி. 756 — மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு
----------------------------

2.1 நிதி விளைவுகள்
---------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,801,779 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,376,377 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 6,574,598 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு
-----------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான மிகையினை முன்னைய ஆண்டிற்கான மிகையுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 6,574,598 இற்கான குறைவு ஒன்று அவதானிக்கப்பட்டதுடன் அதற்காக 2014 ஆண்டின் போது 02 வருமான விடயங்களில் வருமானம் நூற்றிற்கு 10 முதல் நூற்றிற்கு 30 இற்கான வீச்சில் குறைவடைதலும் 03 செலவு விடயங்களில் நூற்றிற்கு 07 முதல் நூற்றிற்கு 31 வீச்சில் அதிகரிப்பு ஒன்று காரணமாகியுள்ளது.

2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்
------------------------------------------------------------------

மொத்த நடைமுறை சொத்துக்களுடன் நடைமுறை பொறுப்புக்களை பரிசோதனை மேற்கொண்ட போது நடைமுறை விகிதம் 1.7.1 என்ற உச்ச மட்டத்தை விட குறைவாக காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. நடைமுறை சொத்துக்கள் நூற்றிற்கு 53 உம் வருமான கடன்பட்டோரினாலும் அடங்கியிருந்ததுடன் நடைமுறை பொறுப்புக்களில் நூற்றிற்கு 68 உம் நிர்மாண வேலை கடன்கொடுத்தோர்கள் என அவதானிக்கப்பட்டது.

2.4 வருமான நிருவாகம்
-----------------------------------

2.4.1 வீத வரி
---------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி மீதி ரூபா 12,670,523 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 4,110,440 தொகை பல வருட காலம் முதல் புகையிரதத் திணைக்களத்தில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) சபையின் ஆதனங்களை 05 வருடத்திற்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்து அதன் பிரகாரம் வீத வரி திருத்தப்பட வேண்டும். எனினும், 2009 ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டின் பிரகாரம் 2014 ஆண்டின் போது வரி அறவீடு செய்யப்பட்டிருந்தது. 2009 ஆண்டின் பின்னர் நாவலப்பிட்டிய நகரம் துரிதமாக அபிவிருத்தி அடைந்திருந்ததனால் 2014 ஆண்டின் போது வீத வரி திருத்தப்படாமையால் சபை கணிசமான அளவு வருமானத்தை இழந்துள்ளது.

(இ) 2011 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை 106 கட்டிட விண்ணபங்கள் சபையினால் அங்கீகரித்திருந்த போதிலும், இவற்றில் 10 கட்டிடங்களுக்கு மாத்திரமே இணக்கச்

சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நிர்மாண வேலைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய கணிசமான அளவு வீத வரியினை சபை இழந்திருந்தது.

2.4.2 வாடகை

---------------

(அ) நாவலபிட்டிய பஸ் நிலையத்தில் உட் பகுதியில் காணப்படும் கடைகளின் மாதாந்த வாடகை 03 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எனினும் 2009 ஆண்டு முதல் ரூபா 1,500 இற்கான மாதாந்த வாடகை ஒன்று அறவிடப்பட்டு காணப்பட்டது.

(ஆ) கம்பளை வீதியில் 05 புதிய கடைகளில் 03 இற்கு சிட்டை இடப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அவ் 05 கடைகளில் இருந்து 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 197,200 தொகை ஒன்று நிலுவையாகக் காணப்பட்டது.

(இ) கூறுவிலைகள் கோரப்படாமலும் உடன்படிக்கைகள் கையொப்பமிடப்படாமலும் ஜயதிலக விளையாட்டரங்க சிற்றுண்டிச் சாலை விளையாட்டு கழகம் ஒன்றிற்கு வழங்கியிருந்ததுடன், அவற்றில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 101,510 வாடகை நிலுவை ஒன்று காணப்பட்டது.

2.4.3 விளம்பர அறிவித்தல் பலகை

------------------------------------------------

மீளாய்வாண்டின் போது 183 அறிவித்தல் பலகைள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 707,338 இனை அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.4.4 ஏனைய வருமானங்கள்

---------------------------------------

ஜயதிலக விளையாட்டரங்க விடுதியுடன் சிற்றுண்டிச் சாலையை கூறுவிலை கோரப்படாமல் நபர் ஒருவருக்கு வழங்கியிருந்ததுடன் அங்கு தங்கும் ஒருவரிடம் உணவு வேளை ஒன்றிற்காக சபைக்கு ரூபா 20 அறவிடப்பட வேண்டும். வழங்கப்பட்ட உணவு வேலைகள் தொடர்பாக முறையான பதிவேடு ஒன்று அல்லது சபையின் மேற்பார்வை ஒன்று காணப்பட்டது என அவதானிக்கப்படவில்லை. அத்துடன் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 12,000 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டது.

2.4.5 காணி குத்தகை

----------------------------

சபைக்குச் சொந்தமான 16 காணித் துண்டுகள் குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன் அக் குத்தகை 2008 ஆண்டின் பின்னர் பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை. இக் குத்தகையாளர்களில் இருவர் மாத்திரம் 2014 ஆண்டிற்கான குத்தகையான ரூபா 2,880 தொகையினை செலுத்தப்பட்டிருந்ததுடன் மீதியான குத்தகையாளர்களிடம் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 281,876 ஆகும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 ஒப்பந்த நிருவாகம்

----------------------------------

(அ) கழிவு நீரினை சுத்தமாக்கல்

----------------------------------------------

நாவலபிட்டிய நகர சபை சுற்றாடல் பாதுகாப்பு நிலையத்தில் சேகரமாகும் கழிவு நீர் குழாய் மூலம் உயிரியல் மீள் சுழற்ச்சி ஒன்றிற்கு செலுத்தி குறிப்பிட்ட தங்கி வைக்கும் காலம் முடிந்த பின்னர் ஈர தரைகளுக்கு அனுப்பி சுத்திகரித்த பின்னர் சுற்றாடலுக்கு விடுவிக்கும் நடைமுறை ஒன்று ஏற்படுத்துவதற்காக பேராதனை பல்கலைக்கழக சுற்றாடல் பொறியியல் துறை பற்றிய விரிவுரையாளர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 260,000 இற்கான மதிப்பீட்டு தொகையில் ரூபா 104,000 இற்கான தொகையொன்று 2015 ஜனவரி 17 திகதி செலுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியாகிய 2010 மார்ச் 30 திகதி வரை குறிப்பிட்ட செயற்பாட்டில் முன்னேற்றம் சுமார் நூற்றிற்கு 10 மட்டத்திலேயே காணப்பட்டது.

(ஆ) திட்டமிட்ட நான்கு மாடிக் கடைத் தொகுதி நிர்மாணித்தல்

பழைய நகர சபை கட்டிடம் அமைந்திருந்த இடத்தில் நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டிருந்த புதிய வர்த்தக தொடர் கட்டிடத் தொகுதிக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் சமர்ப்பிக்கப்பட்டிருந் வரைபு மீது திருத்தங்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் கட்டட நிர்மாணக் கலைஞர் ஒருவரின் உதவியை பெற்றிருந்ததுடன், தெளிவான தன்மை இன்றி கேள்வி வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குறிப்பிட் கட்டட நிர்மாண கலைஞருக்கு ரூபா 1,000,000 இற்கான முற்பணம் ஒன்று செலுத்தியிருந்த போதிலும் சமர்ப்பித்திருந்த வரைவு நகர அபிவிருத்தி அதிகாரச் சபையின் வரைபுகள் மற்றும் கட்டட பிரமாணங்களுக்கு இணக்கமின்மையினால் 2015 மார்ச் 20 திகதி வரை செயற்திட்டத்தை அமுல் நடத்த முடியாத நிலையில் காணப்பட்டது. அவ்வாறு இருக்கும் போது, இச் செயற்திட்டத்திற்காக முறையே 2013 ஆண்டின் போது மற்றும் 2014 ஆண்டின் போது ரூபா 1,006,720 வும் மற்றும் ரூபா 1,054,104 உம் வீதம் மொத்தம் ரூபா 2,060,824 தொகை ஒன்று ஆரம்ப வேலைகளுக்காக செலவிடப்பட்டிருந்தது.

3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

2002 ஆண்டின் போது நாவலபிட்டிய பஸ் நிலையத்திற்கு அண்மையில் மலசல கூட முறைமை ஒன்றினை நிர்மாணிப்பதற்காக உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டு கேள்விதாரர் பணமுறி ஒன்றும் சமர்ப்பித்து ஒப்பந்த வேலையை ஆரப்பிப்பதற்காக ஏற்றுக் கொண்ட பின்னர் நியாயமான காரணங்கள் ஏதும் காட்டப்படாமல் நகர சபையினால் உடன்படிக்கை இரத்து செய்திருந்தமையால் கேள்விதாரர் சட்ட நடவடிக்கைகள் எடுத்திருந்தார். இதன் காரணமாக குறிப்பிட்ட வழக்கின் சட்டத்தரணிக் கட்டணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 268,300 தொகை ஒன்று வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் முறைப்பாடு தாரருக்கு ரூபா 719,065 தொகை ஒன்றும் செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது.

3.3 கருத்து முரண்பாட்டுத் தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

நாவலபிட்டிய நகரில் அங்கீகாரம் இன்றி மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த 08 வியாபாரிகளுக்கு எதிராக நகர சபையினால் 2011 அண்டின் போது மேற்கொள்ளப்பட்ட வழக்கு தொடர்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை சபை நிதியத்தில் இருந்து ரூபா 860,000 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது. இந்த ஒரு வழக்கு தவணைக்கு ரூபா 40,000 ஆகிய உச்ச சட்டத்தரணிக் கட்டணம் செலுத்தி சட்டத்தரணி ஒருவரின் உதவியைப் பெற்றிருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 திகதி அளவிலும் இந்த வழக்கு முடிவடைந்திருக்கவில்லை.

3.4 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பிரதேச சபை திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவச் செயற்திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் சேதனப் பசளை விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்றில் இருந்து 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்கு ரூபா 389,950 இற்கான தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 கூட்டிணைந்த திட்டம்

சபை கூட்டிணைந்த திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

4.2 பெறுகைத் திட்டம்

ரூபா 61,272,688 இற்கான மூலதனச் செலவுகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு
------------------------------
மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிராகரம் மதிப்பீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 03 வருமான விடயங்களில் நூற்றிற்கு 20 முதல் நூற்றிற்கு 34 வரையும், 05 செலவு விடயங்களில் நூற்றிற்கு 12 முதல் நூற்றிற்கு 45 வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

4.4 அகக் கணக்காய்வு
------------------------------
மீளாய்வாண்டின் போது சபையின் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு
----------------------------------------------------------------------
சபை மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்
-----------------------------------------------------
பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) அகக் கணக்காய்வு
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) வருமான நிருவாகம்
(உ) ஒப்பந்த நிருவாகம்